ॐ

ஸ்ரீரஸ்து.

# ஈசாவாஸ்யோபநிஷத்

## சாரசங்கிரகம்.

ஸ்ரீபகவத்கீதா கூடார்த்ததீபிகை, ஸ்ரீபகவத்கீதாரகஸ்யார்த்தபோதினி, ஆத்மபோததத்துவார்த்ததீபிகை, புருஷசூக்தரகஸ்யார்த்த தர்ப்பணம், ஈசாவாஸ்யோபநிஷத்டீகா, கேநோபநிஷத்தீபிகை முதலிய
வியாக்யானகர்த்தாவாகிய
ஸ்ரீமத் பரமஹம்ஸ
ஸ்ரீ பாலசுப்பிரமணிய
பிரம்மஸ்வாமிகளால்
ரசியிக்கப்பட்டு,

சென்னை:
கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1899.

ஸ்ரீ குருப்யோ நம.

# ஈசாவாஸ்யார்த்தசங்க்ரஹம்.

ఫుల్లేన్దీవరకాన్తి మిన్దువదనం బర్హావతంసప్రియమ్।
శ్రీవత్సాఙ్క ముదారకౌస్తుభధరం పీతామ్బరం సున్దరమ్।
గోపీనాం నయనోత్పలార్చితతనుం గో గోప సంఘావృతమ్।
గోవిన్దం కలవేణువాదనపరం దివ్యాఙ్గభూషం భజే॥

---

శ్లో॥ మీనాక్షీనగరీవాసి పరమహంసద్విజోత్తమాన్।
స్వానుభూతినిరత శ్రీపిచ్చుకుప్పాహ్వయోయతిః॥ ౧॥

శ్లో॥ మమగురూన్సదాశివ పరబ్రహ్మశ్రమీవరాన్।
ప్రణమామిముహుర్భక్త్యా భాష్యపాఠాదికర్మసు॥ ౨॥

శ్లో॥ తత్ప్రసాదబలేనైవ విజ్ఞాతంయచ్చకించన।
సటీకాఈశావాస్య తాత్పర్యంభాష్యసమ్మతమ్॥ 3॥

శ్లో॥ శ్రుతివాక్యైస్తథాచార్య వాక్యైరేవవిశేషతః।
జిజ్ఞాసుజనతోషాయ సఙ్గ్రహేణబ్రవీమ్యహమ్॥ ౪॥

శ్లో॥ శ్రీమత్పరమహంసబాల సుబ్రహ్మణ్యేతిస్వామినా।
ఈశావాస్యోపనిష త్తాత్పర్యమిహకథ్యతే॥ ౫॥

என்றால், இந்த ஈசாவாஸ்யோபநிஷத்தின் தாத்பரியத்தை எழுதத் தொடங்குங்கால் விக்கினமில்லாமல் சமாப்தியை யடைவதற்காகத் தெய்வத்தையும் குருவையும் பிரார்த்தனை செய்யும் விதத்தைத் தெரிவிக்குஞ் சுலோகங்களாம்.

•

ஜநநமரணப் பிரவாகத்திற் சுழன்றுழலும் பிராணிகளை இரக்ஷிக்கும் பொருட்டு வேதம் இரண்டுமார்க்கங்களைத் தெரிவிக்கின்றது. அவைகளுள் ஒன்று கர்மமார்க்கம் மற்றொன்று ஞாநமார்க்கம். இதில் கர்மமார்க்கம் இரண்டு வகுப்புள்ளது. அதாவது, காம்யகர்மம், நிஷ்காமகர்மம். பேதபுத்தியையும், அகங்கார மமகார ஸ்வரூபங்களாயுள்ள கர்த்திருத்வ போக்த்திருத்வாதிகளையும், காமக்குரோதாதிகளென்கிற அசுத்தத்வத்தையு முடையவர்களால் அநுஷ்டிக்கப்படும் மார்க்கமே காம்ய கர்மமெனப்படும். தாஞ்செய்யும் எல்லாச் சத்கர்மங்களையும் பகவதர்ப்பணஞ் செய்கிற புத்தியையுடையோர்களால் அநுஷ்டிக்கப்படுவதே நிஷ்காம கர்மமெனப்படும். இவ்வித நிஷ்காம கர்மங்களைச்செய்து சித்தசுத்தியை யடைந்து அபேத புத்தியையும், கர்த்திருத்வ போக்த்திருத்வ அகங்கார மமகாரங்களற்ற நிலைமையையும், காமக்குரோதாதிகளால் விடுபட்ட சுத்தத்வத்தையும் பாபரகிதத்வத்தையு முடை

பவர்களால் அநுஷ்டிக்கப்படுவதே ஞாநமார்க்க மெனப்படும்.

இவ்விரண்டு மார்க்கங்களையுங் குறித்து பதி னெட்டு மந்திரங்களால் சவிஸ்தாரமாகச் சொல் லப்படுவதே (சுக்ல எஜுர்வேத வாஜஸநேய ஸம்ஹிதாந்தத்தில் சொல்லபபடும்) இந்த ஈசா வாஸ்யோபநிஷத்தென்று தெரிந்து கொள்ளவும். இதில் முதல்மந்திரம் ஞானமார்க்கத்தைத் தெரி விக்கிறது:—அதாவது.

1 - வது மந்திரம், சுவாநுபவமாகிய நிஷ்டை யையடைய அபேக்ஷிக்கிற முமுக்ஷு, தாரே ஷண புத்திரேஷண வித்தேஷணங்களாகிய ஈஷ ணத்திரயங்களையும் விட்டு ஆத்மநிஷ்டை யுடை யவனாகி ஆத்மாவை (தன்னை) இரக்ஷித்துக் கொ ள்ளவேண்டு மென்பதைச் சொல்லுகிறது.

2 - வது மந்திரம், அப்படி நிஷ்டையை யடை வதற்குச் சாமர்த்தியமற்றவனும் கர்மேந்திரிய ஞானேந்திரிய மனோநிக்கிரகமற்றவனுமான ஒரு வன் மோக்ஷாபேக்ஷை யடைவானாயின் அவனும் இரக்ஷிக்கப்படும் மார்க்கத்தைச் சொல்லுகிறது.

3 - வது மந்தாம், மேற்சொன்ன இரண்டு மா ர்க்கங்களையும் விட்டு இந்தப் பிரபஞ்சத்தினு

டையவும் சுவர்க்காதிகளி னுடையவும் சுகமே சுகமென்று அவிவேகத்தா லெண்ணி பலாபே க்ஷை யுடையவர்களாகி கர்மங்களை யநுஷ்டித்து விஷயாசக்தர்களா யிருக்கும் காம்ய கர்மானுஷ் டானர்களாகிய கற்றறிமோழைகளைக் குறித்தும் அவர்களுடைய கதியைக் குறித்துஞ் சொல்லு கிறது.

4 - வது மந்திரம், எந்த பகவத்ஸ்வரூபத்தை சுவாநுபவத்தால் தெரிந்துக்கொள்ளாமையால் ஆத்மஹந்தாள் (தற்கொலைசெய்யும் அக்ஞானி கள்) ஜனனமரண ஸ்வரூபமான இந்த சம்சாரத் திற் பிறந்திறந் துழன்றுண்டு கொண்டிருப்பார் களோ, பரம புருஷார்த்தத்திற்கிது விரோத மானதென்றெண்ணி எந்த ஆத்மஞானிகள் இந் த ஜனனமரண ரூபமாயுள்ள சம்சாரத்தினின் றும் விடுபட்டு முக்தர்களாகி மோக்ஷத்தை யடைவார்களோ அப்பேர்ப்பட்ட ஆத்மஸ்வ ரூபத்தைத் தெரியப்படுத்துகிறது.

5 - வது மந்திரம், ஆத்மஸ்வரூபத்தை மேற் சொன்ன மந்திரத்தில் காணஸ்வரூபமாய் மாத் திரஞ் சொல்லப்பட்டது. அப்பேர்க்கொத்த ஆத்மா எப்படிப்பட்டதோ தூரத்திலிருக்கிற தோ அல்லது சமீபத்திலிருக்கிறதோ, தூரமென் றால் எவ்வளவு தூரமோ, சமீபமென்றால் எவ்

வளவு சமீபமோ என்கிற இப்பேர்க்கொத்த சந்தேகங்கள் நிவர்த்திக்கும் மார்க்கத்தையும், அவ்வநுஷ்டானத்தால் ஆத்மஸ்வரூபா வாப்தியையடையும்பொருட்டு ஆத்மாவினுடைய காரணகாரிய சொரூபங்களைத் தெரிவிக்கிறது.

6-7 - வது மந்திரங்கள், மேற்சொன்ன மந்திரத்திற் சொல்லப்பட்ட ஆத்மஸ்வரூப ஞானானுபவ பலமாகிற ஜீவன்முக்திலட்சண விவரங்களைக் குறித்துச் சொல்லுகின்றன.

8 - வது மந்திரம், முன்சொன்ன மந்திரங்களில் சொல்லப்பட்ட ஆத்மஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ளாமையே ஜீவத்வமென்றும், நிஷ்டையாலுண்டாகும் ஸ்வாநுபவமே ஆத்மத்வமென்றும், அப்படிப்பட்ட ஸ்வஸ்வரூபமாயுள்ள ஆத்மஸ்வரூபவிவரத்தை அறிவிக்கிறது.

9 - வது மந்திரம், இந்த ஈசாவாஸ்யோபநிஷத்தின் முதல் மந்திரத்தில் ஈஷணைத்திரயங்களைப் பரித்தியாகம்பண்ணி சத்குருவையடைந்து ஞாநநிஷ்டாப்பியாச ஸ்திதியையடையுஞ் சாதனங்களைக் குறித்துச் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட ஞானநிஷ்டையடைவதற்கு அசமர்த்தனையிருப்பவன் சாஸ்திரவிகித கர்மங்களின் பலனையபேக்ஷியாமல் பகவதர்ப்பணஞ் செய்ய

வேண்டுமென்று இரண்டாவது மந்திரம் உப தேசித்து, இவ்விரண்டு மந்திரங்களைப்பற்றின சாதக பாதகங்களையும், தத்பலங்களையும் பற்றி இதுவரைக்குஞ் சொல்லப்பட்டது இவ் வுப தேசங்களினால் மனது ருசிக்காமல் வேதசாத்திர ங்களில் அங்கங்கே வேறுவேறாய்ச் சொல்லப்பட் டிருக்கும் அல்ப பலங்களில் ஆசக்தியுடையவர்க ளாகி அவைகளை யநுஷ்டித்து தத்பலங்களை யடையக் கோருபவர்க்குண்டாகும் பலாபலவிஷ யத்தைக்குறித்துச் சொல்லுகிறது.

10-வது மந்திரம், எத்தனை விதங்களால் சொ ல்லினும் கிரகிக்கச் சாமர்த்தியமற்ற காம்யகர்மத் திலேயே ஆசக்தியை யுடையவர்கள்கூட நன்மை யையடையவேண்டி பெரியோர்களா லநுக்கிர கிக்கப்பட்ட மார்க்கத்தைச் சொல்லுகிறது.

11-வது மந்திரம், அநாதியாயுள்ள சுத்தப் பிர ம்மமானது தன்னிலீனமாயிருக்கும் அவ்யாகிரு தம், மஹத்தகங்காரம், மூலப்பிரகிருதி, மாயையென் கிற பேர்களால் விவகரிக்கப்படும் ஸ்வசக்திவ் யாபகத்தால் தன்னுடைய (சுத்தப்பிரமத்தினு டைய) ஸ்வரூபம் ஆவரிக்கப்பட்டது. இப்படி ப் பரவ்யாபகத்திற்கு ஆஸ்பதமானபடியால் பர ப்ரம்மமென்று சொல்லப்படுகிறது. அப்பேர்க் கொத்த மாயையிலிருந்து பிரம்ம விஷ்ணு உருத்

திரர்களும், அவித்யாஸ்வரூபமான ஆவரண வி க்ஷேப சக்திகளு முண்டாயின. அந்த அவி த்தையால் ஜீவத்வமுண்டாயிற்று. இப்படி சுத் த பிர்ம்ம ஸ்திதியிலிருந்து ஜீவஸ்திதியை யடை வதற்கு மாயை அவித்யை என்கிற இரண்டுபடி கள் (ஸ்திதிகள்) இருக்கின்றன. அப்படியே ஜீவ ஸ்திதியிலிருந்து சுத்த பிர்ம்மஸ்திதியையடைவ தற்கு அவித்யை, மாயையென்கிற படிகளை (ஸ்தி திகளைக்) கடக்கவேண்டும். ஆகையால் அவித் யை என்கிறபடியைக் கடந்து மாயையென்கிற படியை யேறுகிறதற்குச் சாதனமான (மாயோபா திகர்களான பிரம்ம விஷ்ணு உருத்திரர்களைக் காட்டிலும்) இதர தேவதாராதனை அல்லது உ பாசனைக் கிரமங்களான அதமசகுணோபாஸனை மார்க்கத்தைக் குறித்துச் சொல்லுகிறது.

12-வது மந்திரம், மேற்சொன்ன மந்திரத்தில் அவித்யையையும் அவித்யா காரியங்களையும் உ பாசனை செய்பவர்களாகிய அதம சகுண பாச கர்களை நிந்தித்து அவர்களுங்கூட தங்க ளுபா ஸனையை பகவதர்ப்பணமா யநுஷ்டித்தால் பரம் பராக் கிரமமாய் மோக்ஷத்தையே யடைவார்க ளென்று சவிஸ்தாரமாகச் சொல்லப்பட்டது. அப்படியே மாயையையும் மாயாகாரியங்களையும் உபாஸனை செய்பவர்களான மத்திம சகுண

பாசகர்களை நிந்தித்து அவர்களுங்கூட அவ்வுபாஸனையை பகவதர்ப்பணமாகச் செய்வார்களேயாகில் பரம்பராக்கிரமமாய் மோக்ஷத்தையேயடைவார்களென்று சொல்லுகிறது.

13-வது மந்திரம், அணிமாதிஸித்திகளிலும், கர்மத்தையே ஆசரிக்காமலிருக்கிற விஷயத்திலும் ஆசக்தியுடையவர்கள்கூட நன்மையை யடையும்பொருட்டு பெரியோர்களா லநுக்கிரகிக்கப்பட்ட மார்க்கத்தைக்குறித்துச் சொல்லுகிறது.

14-வது மந்திரம், முன்னே இரண்டு மந்திரங்களால் சொல்லப்பட்ட மத்திம சகுணோபாஸனையை, பலத்தை யபேக்ஷிக்காமல் பகவத்பிரீதியா யநுஷ்டிக்கும் விஷயத்தில் மாயை என்கிறபடியையுங்கடந்து கிரமமாய் மோக்ஷத்தை யடையலாமென்று சொல்லுகிறது.

15-வது மந்திரம், கர்மபலத்தி லாசக்தியுடையவன் காம்ய கர்மாநுஷ்டானத்தினால் தேவதைகளை யாராதிக்கிறபடியால் இகலோகசுகம் முதற்கொண்டு பிரகிருதி லயம்வரைக்குமுள்ள ஸ்திதியையுடைய பிரவிர்த்தி மார்க்கத்தைக்குறித்தும், இதில் ஏழாவது மந்திரத்திற் சொன்னபடி ‘‘తఅత్మైవాభూద్విజాన’’ః ‘‘சகலமும் பகவத் ஸ்வரூபமே’’ யென்று தெரிந்து கொண்டவ னடையும்

நிவர்த்தி மார்க்கத்தைக் குறித்தும் அங்கங்கே இதுவரைக்குஞ் சொல்லப்பட்டது, என்றால் பிரபஞ்சத்தி லிருக்கிற சிஷ்யரூபங்களான சகலத்தையும் ரக்ஷிக்கும்படியாக அவரவர்களுக்குத் தக்கமார்க்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அநுஷ்டானம்பண்ணி எவ்விதமாகவாவது ராகத்வேஷ காமக் குரோத லோப மோக மத மாத்சரிய ஈரிஷ டம்ப அசூய அஹங்கார மமகாரங்கள் முதலிய துர்க்குணங்களைப் போக்கடித்துக்கொண்டு நன்மையை யடையவேண்டிப் பிரவிர்த்தி நிவிர்த்தி மார்க்கங்க ளிதுவரைக்குமே சொல்லப்பட் டிருக்கின்றதல்லவா? அப்படியே ஸ்வஸ்வரூபாநுபவமான ஆத்மாநுபவ விவரமு மிதுவரைக்குஞ் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? அந்த ஆத்மாநுபவமானது அதம மத்திம சகுணோ பாஸனையினாலடைய முடியாததென்று சுருதிகள் கோஷிக்கிறபடியால் அப்படிப்பட்ட சாக்ஷாத்காரத்திற்கு வேண்டிய சாதனங்களை இந்த மந்திரஞ் சொல்லுகிறது.

16 - வது மந்திரம், மேற்சொன்ன மந்திரத்தில் சொன்னபிரகாரம் மனது ஏகாக்கிர ஸ்திதியை யடைய பகவானை (ஆத்மாவை) பிரார்த்தனை செய்யும் உத்தமசகுணோபாஸனை விதத்தைக் குறித்துச் சொல்லுகிறது.

17 - வது மந்திரம், மேற்சொன்ன மந்திரத்தி லுள்ள உத்தம சகுணோபாசனையென்கிற காமக் குரோதாதி நிவர்த்தகங்களான சித்தசுத்தியை யடைந்து நிர்க்குணஸ்திதியான தியானம் நிஷ்டை ஸமாதி ஸாக்ஷாத்காரம் ஸ்வாநுபவம் முதலாயுள்ள இப்பெயர்களால் வ்யவகரிக்கப்படுகிற ஸ்திதியை யடைந்தவனுடைய மரணத்திற்குப் பிறகு அச்சரீரம் என்னவாகி விடுமோ அந்த விவரத்தைக்குறித்துச் சொல்லுகிறது.

18 - வது மந்திரம், அநேக சாதனங்க ளிதுவரைக்குஞ் சொல்லப்படினும் மனதை ஞான மார்க்கத்திற் பிரவேசிக்க இடங்கொடாமல்காம்ய கர்மங்களை யாசக்தியுடன்செய்து, சுவர்க்காதி லோகங்களை யடைந்து, மறுபடியும் பிறந்து, காம்யகர்ம்மங்களை அநுஷ்டிக்கிறவர்கள் மரணகாலத்திற்கூட தாமிதுவரையி லாராதனை செய்துவந்த அக்கினியைப் பிரார்த்திக்கிற விதத்தைக் குறித்துச் சொல்லுகிறது.

மேற்சொன்ன பதினெட்டு மந்திரங்களால் கர்ம ஞானமார்க்கங்களையும், உத்தம மத்திம அதம சகுணோபாசனைகளையுஞ் சொல்லி, அதம மத்திம சகுணோபாசனைகளையும் காம்ய கர்மோபாஸனைகளையும் நிஷேதித்து துர்க்குணங்களைத் தன்னிடத்தினின்றும் விலக்கி மனதினுடைய

ஏகாக்கிரத்திற்குச் சாதனமானதாயுள்ள உத்தம சகுணோபாஸனையையே அநுஷ்டிக்க வேண்டுமென்று நிர்ணயிக்கிற இந்த ஈசாவாஸ்யோபநிஷத்துக்கு மும் மதஸ்தர்களும் பாஷ்யஞ் செய்திருக்கிறார்கள்.

ஜநந மரண ரகிதமான மோக்ஷத்தை யடைவதற்கு சங்கல்பங்களினுடைய நாசமும், வாஸனைகளினுடைய நாசனமுமே முக்கியமென்று சுருதிகள் கோஷிக்கிறபடியால், அப்படிப்பட்ட சங்கல்ப வாஸநாநாசமானது ஞானத்தாலல்லாது வேறெந்தவழியாலும் அடையமுடியாது. அப்படிப்பட்ட ஞானமானது மூவகைத்து:—

1. துவைதஞானம்,
2. விசிஷ்டாத்வைதஞானம்,
3. அத்துவைத ஞானம்,

1. கோழியானது குஞ்சுபொரிப்பதற்காக தானிட்ட முட்டையின்பேரில் உட்கார்ந்து அன்னகார ஜலபானங்கள் முதலியவைகளின் இச்சையை மறந்து, எப்பொழுதும் அடைகாத்து சில நாட்களின் பிறகு குஞ்சுபொரிக்கிறது. அப்படிப்போன்றது துவைதம்,

2. மீனானது தண்ணீரில் முட்டையிட்டு அந்த முட்டையை, கோழியைப்போல அடைகாக்காமல், தன்னுடைய வீக்ஷணமாகிய கண்ணின்பார்

வையால் ஆக்ராம் முதலானவைகளின் இச்சை யைமறந்து இடைவிடாமல் தன்னுடைய முட் டையைப் பார்ப்பதினால் குஞ்சு பொரிக்கிறது. அப்படிப்போன்றது விசிஷ்டாத்துவைதம்.

3. ஆமையானது தன்னுடைய முட்டையை கரையிலிட்டு மூடிவைத்து தான் தண்ணீரிற்செ ன்று அன்னகார முதலான இச்சைகளைமறந்து எப்போதும் அந்த முட்டையையே ஸ்மரித்துக் கொண்டிருக்கிறபடியால் குஞ்சு பொரிக்கிறது. அப்படிப்போன்றது அத்துவைதம்.

இம்மூன்றிலும் குஞ்சு பொரிக்கிறதென்பது பலன். அப்பலனில் வித்தியாசம் ஒன்றுமில்லை. ஆனால் முட்டையை அடைகாக்கும் வழிமாத்திர ம் வித்தியாசப்படும். அப்படிப்போல துவைதம், விசிஷ்டாத்துவைதம், அத்வைதம், இம்மூன்றி னாலும் அடையப்படும் மோக்ஷபலம் ஒன்றேயா ம். வழிமாத்திரம் வித்தியாசப்படும். வழி வித்தி யாசத்தினால் நமக்கு ஒருபாதகமுமில்லை. ஒரூரை நோக்கிச்செல்லும் நான்குபேர்கள் நாலுவழியா க நடந்தபோதிலும் ஊர் சேருகிறதுமாத்திரம் ஒன்றுதான். அப்படிப்போல இம்மூன்று மதங் களும் மோக்ஷத்தையடைவதற்குச் சாதனமான வைகளே யல்லாமல் வேறல்லவென்று கிரகித்து திரிமதபாஷ்யங்களும் மோக்ஷசாதனங்களேயெ

ன்று சமபுத்தியாய் கிரகிக்கிறதே சிரேஷ்டமெ
ன்று தெரிந்துகொள்ளவும்.

இவ் வீசாவாஸ்யோப நிஷத்திற் கிதுவரையி லநேக பாஷ்யங்க ளிருந்தபோதிலும், அவைக ளெல்லாம் சமஸ்கிருத பாஷையி லிருக்கிறபடி யாலும் மிகுந்த கூடார்த்தத்தை யுடையதா யிருக்கிறபடியாலும், சுவல்ப ஸமஸ்கிருத ப யிற்சி யுடையோர்களுக்கும், இல்லாதவர்களுக் கும் பாஷ்யார்த்தத்தைத் தெரிந்துகொள்வது அசாத்தியமாகையால் எல்லோரும் இந்த ஈசா வாஸ்யோபநிஷத்தின் சங்கிரகத்தை சுலபமா யறிந்து அநுஷ்டித்து, ததநுபவத்தை யடைந்து நித்தியாநந்தத்தைப்பெற்று கிருதார்த்தர்களாக வேண்டுமென்கிற அபிலாஷையுடன் இச்சுருக்க த்தைத் தெலுங்கிலும் தமிழிலும் அச்சிட்டனன்.

☞ பதவிபாக தாத்பரியங்களுடன் தெரிந்துகொள்ள இஷ்டமுடையவர்கள், இச்சுருக்கத்தை அச்சிட் டவரால் தமிழிலும் தெலுங்கிலும் மொழிபெயர்க் கப்பட்டிருக்கிற "ஈசாவாஸ் யோபநிஷத்டீகா" என்கிற கிரந்தத்தினுல் தெரிந்து கொள்ளலாம்.

இங்ஙனம்

பரமஹம்ஸ பாலசுப்பிரமணிய
பிரம்மசுவாமி.

## ஸ்ரீமத் பரமஹம்ஸ
## பாலசுப்பிரமணிய பிர்ம்மசுவாமிகளால்
## இயற்றப்பட்டிருக்கிற
## புஸ்தகங்களின் விபரம்.

### தமிழ்.

| | | | | |
|---|---|---|---|---|
| புருஷசூக்த ரஹஸ்யார்த்த தர்ப்பணம் ... | 0 | 2 | 0 |
| ஈசாவாஸ்யோபநிஷத் டீகா ... .. | 0 | 8 | 0 |
| கேநோபநிஷத் தீபிகை (முன்பணங்கொடுப்பவர்களுக்கு | 1 | 0 | 0 |
| பகவத்கீதா ரகஸ்யார்த்தபோதினி (பாரம் ௧-க்கு பைசா-௯.) | 0 | 0 | 9 |

### தெலுங்கு.

| | | | |
|---|---|---|---|
| పురుషసూక్తరహస్యార్థదర్పణం ... | 0 | 2 | 0 |
| ఆత్మబోధతత్త్వార్థదీపికా ... ... | 1 | 0 | 0 |
| ఈశావాస్యోపనిషత్ (టీకా) .. ... | 0 | 12 | 0 |
| భగవద్గీతా గూఢార్థదీపికా ... ... | 4 | 8 | 0 |
| భగవద్గీతారహస్యార్థబోధిని (ఫారం ౧కి)... | 0 | 0 | 9 |
| కేనోపనిషద్దీపికా(ముందుగా పైకమిచ్చువారికి) | 1 | 0 | 0 |

### ENGLISH.

| | | | |
|---|---|---|---|
| English Pamphlet containing Esoteric explanation of caste marks, Holy thread Mahalinga and Nirguna worship &c. ... ... ... | 0 | 2 | 0 |
| Lecture on Saguna worship ... .. | 0 | 1 | 0 |

These books can be had in W. Pushparatha Chetty & Co. 289 Thumboo Chetty Street, Madras.